செய்தி வெளியீடு எண்: 111 நாள்:04.09.2019

# பத்திரிக்கை செய்தி

சென்னை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் சிறுபான்மையினர் பிரிவில் உலமா நல வாரியத்தில் உள்ள உலமாக்களுக்கு உலமா அட்டை வழங்கப்படுகிறது. உலமா அட்டை பெறுவதற்கான தகுதி (வயது 18 முதல் 60 வயது வரை) பள்ளிவாசல், தர்காக்கள் மற்றும் மதரஸாக்களில் பணிபுரியும் பணியாளர்கள். 'உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்' என்ற அமைப்பின் மூலம் நலத்திட்ட உதவிகளை அரசு வழங்குகிறது. இது தொடர்பாக மேற்கூறிய பணியாளர்கள் அடையாள அட்டை பெற வஃக்பு ஆய்வாளர்களின் பரிந்துரையுடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் விண்ணப்பிக்க வேண்டும். உலமா அடையாள அட்டை மூலம் உறுப்பினர் ஆனவர்களுக்கு கீழ்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

**<u>நலத்திட்டங்கள்:</u>**

| வ.எண் | நலத்திட்டங்கள் | தொகை |
|---|---|---|
| 1. விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | | |
| | அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1 ,00,000/– |
| | ஆ) (விபத்தால் ஊனம் ஏற்பட்டால்) ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000/– முதல் ரூ.1,00,000/– |
| 2. | இயற்கை மரணத்திற்குள்ளானவர் குடும்பத்திற்கு உதவித்தொகை | ரூ. 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000/– |
| 4. கல்வி உதவித்தொகை | | |
| | i) 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000/– |
| | ii) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000/– |
| | iii) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000/– |
| | iv) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ. 1,500/– |
| | v) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ. 1,500/– |
| | vi) முறையான பட்டப்படிப்புக்கு | ரூ. 1,500/– |

| | | |
|---|---|---|
| | vii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750/– |
| | viii) முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.2,000/– |
| | ix) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.3,000/– |
| | x)தொழிற்கல்வி பட்டப்படிப்புக்கு | ரூ.2,000/– |
| | xi)மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்புக்கு | ரூ.4,000/– |
| | xii)தொழிற்கல்வி பட்டமேற்படிப்புக்கு | ரூ.4,000/– |
| | xiii)மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டமேற்படிப்புக்கு | ரூ.6,000/– |
| | xiv)ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு | ரூ.1,000/– |
| | xv)மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல்தொழிற்பயிற்சிப் படிப்புக்கு | ரூ.1,200/– |
| 5. | திருமண உதவித்தொகை | ரூ.2,000/– |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | |
| | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000/– |
| | கருச்சிதைவு/கருக்கலைப்பு | ரூ.3,000/– |
| 7. | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500/– வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000/– |

மேற்கூறிய நலத்திட்டங்கள் குறித்து சிறுபான்மை இனத்தை சார்ந்த முஸ்லீம்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2ம் தளத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தினை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 25241004–02.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர். திருமதி ஆர். சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை-1